ஈழநாடு
மின்னிதழ் E-paper
Eelanadu
25.06.2020 வியாழக்கிழமை

## கருணாவை தேடுகிறது சி.ஐ.டி.!

கொழும்பு, ஜூன் 25
கருணா என்றறியப்பட்ட விநாயக மூர்த்தி முரளிதரன் வெளியிட்ட கருத்து தொடர்பில் விசாரணை செய்ய, உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஒருவரின் தலைமையில் குற்றப்புலனாய்வுத் திணைக்களம் குழு ஒன்றை நியமித்துள்ளது.
இந்தக் குழு கிழக்கு மாகாணத்திற்கு சென்று சாட்சியங்களைப் பதிவு செய்யும் நடவடிக்கையை ஆரம்பித்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜாலிய சேனாரத்ன தெரிவித்தார்.
கிழக்கிற்கு சென்றுள்ள குழு பல்வேறு தரப்பினரிடம் வாக்குமூலம் பதிவு

02

# 20 ஆயிரம் உளவாளிகளின் வலைக்குள் தமிழர் தாயகம்

### இராணுவ ஆட்சியை ஏற்படுத்தவும் கோட்டா தயங்கார் என்கிறார் மாவை

யாழ்ப்பாணம், ஜூன் 25
“ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தமிழர் தாயகத்தில் 20 ஆயிரம் உளவாளிகளை நடமாட விட்டுள்ளார். எதிர்காலத்தில் ஒரு பூரணமான இராணுவ ஆட்சியை இந்த நாட்டிலே அவர் நிறுவினாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை. அப்படித்தான் நிலைமைகள் இருக்கின்றன.”
- இப்படிக் கூறியுள்ளார் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவரும் முன்னாள் எம்.பியுமான மாவை சேனாதிராசா.

02




## 2000 ஐ கடந்தது கொரோனா தொற்று



யாழ்ப்பாணம், ஜூன் 25
இயக்கச்சி தனிமைப்படுத்தல் முகாமில் தனிமைப்படுத்தப்பட்ட 3 கடற்படையினர் உட்பட 10 பேருக்கு கொரோனா தொற்று இருப்பது நேற்று உறுதி செய்யப்பட்டது.
இதன்மூலம், நாட்டில் கொரோனா தொற்றுக்கு இலக்கானவர்களின் எண்ணிக்கை

02

## 1,00,000 பி.சி.ஆர். சோதனை



கொழும்பு, ஜூன் 25
கொரோனா வைரஸ் நோயாளர்களை அடையாளம் காண்பதற்காக இலங்கையில் ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன என்று சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்தார்.
நாளொன்றுக்கு 500 பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளக்கூடிய ஆய்வுகூடம் கொழும்பின்

02

## மிலேனியம் சலஞ்ச் உடன்படிக்கை இறுதியறிக்கை பிரதமர் மஹிந்தவிடம்



கொழும்பு, ஜூன் 25
480 கோடி டொலர் பெறுமதியான தொடர்பான அமெரிக்காவின் மிலேனியம் சலேஞ்ச் கோப்ரேசன் என்ற

02

## பி.சி.ஆர் பரிசோதனைக்கு பணம் அறவிட நடவடிக்கை

கொழும்பு, ஜூன் 25
வெளிநாடுகளில் இருந்து வருகைதரும் பயணிகளிடம் இருந்து, பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்வதற்காக செலவிடப்படும் பணத்தை, அவர்களிடமிருந்து அறவிடுவது தொடர்பில் கவனம்

02

## தௌகீத் ஜமாத்துக்கு ரூ. நாலரை கோடி வழங்கினாராம் ஈஸ்டர் தற்கொலைதாரி

கொழும்பு, ஜூன் 25
உயிர்த்த ஞாயிறு தினத்தில் சினமன் கிராண்ட் ஹோட்டலில் தற்கொலைத் தாக்குதல் நடத்திய முஹமட் இப்ராஹீம் இன்சாப் அஹமட்டுக்கு நான்கரை கோடி ரூபா வழங்கப்பட்டதாக விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.
இதேவேளை, தாக்குதலுக்கு செல்லும் முன்னர் வியாபார விடயம் தொடர்பாக வெளிநாடு செல்வதாக மனைவியிடம் கூறிவிட்டே சென்றார் என்றும் கூறப்படுகின்றது.
இந்த விடயங்களை உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் விசாரணை செய்யும் பிரதான பொலிஸ்

02

## 47,000 மேற்பட்ட தபால் வாக்கு விண்ணப்பங்கள் நிராகரிப்பு

கொழும்பு, ஜூன் 25
நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலுக்காகப் பெறப்பட்ட 7 இலட்சத்து 53 ஆயிரத்து 31 தபால் மூல வாக்கு விண்ணப்பங்களில் 47 ஆயிரத்து 430 விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டன என்று தேர்தல்கள் திணைக்களம் தெரிவித்துள்ளது.
7 இலட்சத்து 5 ஆயிரத்து 85 விண்ணப்பங்களே ஏற்கப்பட்டன என்றும் தேர்தல்கள் திணைக்களம் மேலும் தெரிவித்தது.

02

## ஆட்டம் காணும் இலங்கை பொருளாதாரம்

### சர்வதேச கடன் வழங்கும் அளவீட்டில் B தரத்திலிருந்து B- ஆக தரமிறக்கம்

கொழும்பு, ஜூன் 25
சர்வதேச நாடுகள் கடன் வழங்குவதற்கான தகுதிகாண் “பிட்ச் ரேட்டிங்ஸ்“ (Fitch Ratings) அளவீட்டில் B தரத்தில் இருந்து B- ஆக இலங்கை தரமிறக்கப்பட்டுள்ளது.
இது இலங்கை கடன் பெறுவதில் பாதகத்தை ஏற்படுத்தும் என்று மதிப்பிடப்படுகின்றது.
எனினும் தேர்தல் முடிந்த பின்னரே - ஓகஸ்ட் 5 ஆம் திகதியின் பின்னர் கொள்கை

02

## நயினை அம்மனை வழிபட 370 பேருக்கு தினமும் அனுமதி



யாழ்ப்பாணம், ஜூன் 25
நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயத்தின் உள்வீதியில் 70 பக்தர்களையும், வெளி வீதியில் 300 பக்தர்களையும் அனுமதிப்பதற்கு அமைச்சரவை நேற்று அனுமதி வழங்கியது.
ஜனாதிபதி

02

## கொரோனா நிலவர அறிக்கை

| தொற்றாளர் | புதிய தொற்றாளர் | சிகிச்சை பெறுவோர் | சந்தேகநபர்கள் | குணமடைந்தோர் |
|---|---|---|---|---|
| 2001 | 10 | 428 | 30 | 1,562 |

இறப்பு 11

மூலம் : சுகாதார மேம்பாட்டு பணியகம்

## கருணாவை...

செய்யவுள்ளதாகவும், கருணா கருத்து வெளியிட்ட இடத்திலும் தேவையான தகவல்கள் திரட்டப்படவுள்ளதாகவும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜாலிய சேனாரத்ன குறிப்பிட்டார்.

நீதிமன்றத்திற்கு அறிக்கை சமர்ப்பிப்பதற்கு தேவையான சாட்சியங்களை குற்றப்புலனாய்வுப் பிரிவின் விசேட விசாரணைக் குழு திரட்டியதன் பின்னர், அந்த தகவல்களுக்கு அமைய, கருணாவிடம் வாக்குமூலம் பதிவு செய்ய குற்றப்புலனாய்வுத் திணைக்களம் நடவடிக்கை எடுக்கும் எனவும் ஜாலிய சேனாரத்ன மேலும் தெரிவித்தார்.

## 20 ஆயிரம்...

நேற்று யாழ். ஊடக அமையத்தில் ஊடகவியலாளர்களை சந்தித்து கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார். அங்கு அவர் மேலும் கூறுகையில்,

கோட்டாபய ராஜபக்ஷவின் இயல்பு - அவர் இராணுவத்தில் பணியாற்றியதால் ஏற்பட்ட அனுபவங்களுக்கு அப்பால், இப்போது அவர் ஜனநாயக ரீதியான ஓர் அரச தலைவராக வந்துள்ளார். மக்கள் ஆதரித்து இருக்கின்றார்கள்.

ஆனால், அவர் தமிழர் தேசத்தில் 20 ஆயிரம் உளவாளிகளை நடமாட விட்டுள்ளார் என்று எங்களுக்கு செய்திகள் கிடைத்துள்ளன.

இதன்மூலம்எதிர் காலத்தில் ஒரு பூரணமான இராணுவ ஆட்சிஒன்றை நிறுவுவதற்கு - சர்வாதிகார ஆட்சியொன்றை ஜனநாயகத்திற்கு ஊடாக- ஜனநாயகத்தில் பெற்ற வெற்றி என்று சொல்லிஇந்த நாட் டிலே அவர் நிறுவினாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை.

அப்படித்தான் நிலைமைகள் இருக்கின்றன. இவ்வாறான நிலைமையில் இன்று, ஜனநாயக சக்தியின் எதிரணியில் ஐக்கிய தேசியக் கட்சியும் பலவீனப்பட்டு - பிளவுபட்டு நிற்கின்ற நிலைமையே காணப்படுகின்றது.

இதைவிட, முஸ்லிம்களின் தரப்பிலும், மலையகத் தமிழர்களின் தரப்பிலும் எல்லோரும் ஒன்றாக - பலமாக இருக்கிறார்கள் என்ற நிலைமை இன்னும் ஏற்படவில்லை.

முக்கியமாக வடக்கு - கிழக்கு பிரதேசங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒட்டுமொத்தமாக - பலமான நிலையை நிரூபிக்க வேண்டிய - பிரதிநிதித்துவத்தை நிரூபிக்க வேண்டிய நிலைமை உள்ளது.

கிழக்கில் இருந்து வடக்கு வரை நான் பல மாவட்டங்களுக்கு பயணித்துள்ளேன். பல நிகழ்வுகளில் கலந்துகொண்டிருக்கின்றேன். தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தொடர்பில் மக்களுக்கு சில சங்கடங்கள் இருந்தாலும், அவர்கள் மிக உறுதியாக இருக்கிறார்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பெரு வெற்றிபெற வேண்டும் என்பதில். இப்போதைய தேவை இதுவே என்று அவர்கள் நினைக்கிறார்கள் - என்றார்.

## 1,00,000 பி.சி.ஆர்...

முல்லேரியா மருத்துவமனையில் நேற்று திறந்து வைக்கப்பட்டது. இதன்போதே, அவர் மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியுடன் மேற்கொள்ளப்பட்டது. இந்தத் திட்டத்தின் மொத்தப் பெறுமதி (25) கோடி ரூபா ஆகும்.

பரிசோதனை நடவடிக்கைகளை விரைவுபடுத்தும் வகையில், தன்னியக்க மாதிரியை உருவாக்கும் தொகுதியுடன் கூடிய நவீன உபகரணங்களைக் கொண்டதாக குறித்த ஆய்வுகூடம் அமைக்கப்பட்டுள்ளது.

## தௌகீத்...

பரிசோதகர் ரவீந்திர விமலசிறி தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்கள் குறித்து விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியமளிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும், உண்மையில் உயிர்த்த ஞாயிறு தினத்தன்று இடம்பெற்ற தற்கொலை குண்டுத் தாக்குதல்களை அடுத்து சி.ஐ.டி.யின் பல்வேறு குழுக்கள் விசாரணைகளை ஆரம்பித்தன. அதன்படி நான் சினமன் கிராண்ட் ஹோட்டலில், தப்ரபேன் உணவகத்தில் இடம்பெற்ற குண்டு வெடிப்பு தொடர்பில் விசாரித்தேன். நான் அங்கு சென்று ஆராய்ந்த போது தற்கொலைதாரியின் தலை, உடல் பாகங்கள் சிலவற்றை அடையாளம் கண்டேன். எனினும் தற்கொலைதாரி யார் என அந்த சந்தர்ப்பத்தில் நாம் அறிந்திருக்கவில்லை.

இந் நிலையில் தான் எமது இன்னொரு குழு, ஷங்கரில்லா ஹோட்டலில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதல் தொடர்பில் விசாரணை செய்தது. அங்கு ஹோட்டலில் உள் நுழையும் போது, அந்த ஹோட்டலில் தாக்குதல் நடத்திய ஒரு தற்கொலைதாரியான முஹம்மட் இப்ராஹீம் இல்ஹாம் அஹமட் என்பவர் முகவரியொன்றினை கொடுத்திருந்தார். தெமட்டகொட பகுதியை அந்த முகவரி அடையாளம் காட்டியது. அதன்படி அந்த தற்கொலைதாரியின் வீட்டை தேடிச் சென்று நடத்திய விசாரணையின்போதே, சினமன் கிராண்ட் ஹோட்டலில் தற்கொலைத் தாக்குதல் நடாத்தியவர் ஷங்கரில்லா குண்டுதாரிகளில் ஒருவரான முஹம்மட் இப்ராஹீம் இல்ஹாம் அஹமட்டின் சகோதரரான முஹம்மட் இப்ராஹீம் இன்சாப் அஹமட் என தெரியவந்தது.

அதனை உறுதி செய்ய, அவரது தாய் ஜுனைதீன் கதீஜா உம்மா, சகோதரர்களான முஹமட் இப்ராஹீம் இப்லால் அஹமட், முஹம்மட் இப்ராஹீம் இஸ்மாயில் ஆகியோரின் இரத்த மாதிரிகள் ஊடாக பெறப்பட்ட கூறுகளை வைத்து மரபணு பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

இன்சாப் அஹமட் எனும் இந்த தற்கொலைதாரி, 2019.04.21 அன்று தாக்குதல் நடாத்தும் தினத்துக்கு முன்னரே சினமன் ஹோட்டலுக்கு சென்று அவதானிப்புக்களை முன்னெடுத்து வருவதை நாம் சி.சி.ரி.வி.காணொலிகள் ஊடாக உறுதி செய்துள்ளோம். அதாவது 2019.04.17 அன்று, இன்சாப் அஹமட், பிற்பகல் 1.29 மணிக்கு முச்சக்கர வண்டி ஒன்றூடாக, சினமன் கிராண்ட் ஹோட்டலுக்கு வந்து செல்வது சி.சி.ரி.வி. காணொலிகளில் பதிவாகியுள்ளது. எனினும் அவர் 2019.04.18 ஆம் திகதி என்ன செய்தார் என்ற தகவல்கள் விசாரணையில் வெளிப்படுத்தப்படவில்லை

2019.04.19 ஆம் திகதி பிற்பகல் 3.30 மணியளவில் குண்டுதாரியான இன்சாப் அஹமட், தான் வியாபார நடவடிக்கைகளுக்கு சாம்பியா செல்வதாக கூறி கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு சென்றுள்ளார். அப்போது அவரை வழியனுப்ப , மனைவி பாத்திமா சிப்கா, அவர்களது பிள்ளைகளான மொஹம்மட் ஆகில், பாத்திமா ஆனிகா, அமீனா, அமீரா ஆகியோரும் சென்றிருந்தனர்.

குண்டுதாரிக்கு சொந்தமான டப்ளியூ.பி. சி.ஏ.எஸ். 1411 என்ற வீ 8 ரக வெள்ளை நிற டொயாடோ ஜீப் வண்டியிலேயே அவர்கள் சென்றுள்ளனர். இதன்போது ஜீப் வண்டியை குண்டுதாரியான இன்சாப்பின் மனைவியின் தந்தையின் சாரதியான ரிம்சான் என்பவரே செலுத்தினார்.

விமான நிலையத்தில் இறங்கிய இன்சாப் அஹமட் அங்கு செல்லாத போதும் குண்டுத் தாக்குதல் வரையிலும் வெளிநாட்டில் இருப்பதைப் போன்றே, நடந்துகொண்டுள்ளார். இன்சாபும் அவரது மனைவியும், மனைவியின் தகப்பனுக்கு சொந்தமான கொழும்பு 3, பிளவர் வீதி வீட்டிலேயே வசித்து வந்துள்ளனர்.

எனினும் வட்ஸ் அப் ஊடாக மனைவிக்கு 2019.04.19 முதல் 2019.04.21 காலை 7.30 மணிவரை கதைத்துள்ள தற்கொலைதாரி இன்சாப் அஹமட் தான் சாம்பியாவில் இருப்பதை போல் காட்டிக்கொள்ள, முதலில் கென்யா வரை சென்று அங்கிருந்து சாம்பியா செல்வதாகவும், பின்னர் செம்பியாவில் ஒரு கலந்துரையாடலில் இருக்கிறார் என்றும் மனைவிக்கு தெரிவித்துள்ளார். தனது கணவரின் இந்த அடிப்படைவாத , பயங்கரவாத நடவடிக்கைகளை மனைவி பாத்திமா சிப்கா அறிந்திருக்கவில்லை என்பது இதுவரையிலான விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

குண்டுதாரியான இன்சாப் அஹமட், இப்ராஹீம் குடும்பத்தில் வர்த்தக ரீதியில் வெற்றிகண்ட ஒருவர். அவருக்கு வெல்லம்பிட்டி பகுதியில் செப்பு தொழிற்சாலை ஒன்று உள்ளது. இதன் ஊடாக அவர் இந்தியாவுக்கு, வயர்களை ஏற்றுமதி செய்து வந்துள்ளார்.

அவரது கணக்காளர் மிக நேர்த்தியாக இன்சாப் அஹமட்டின் வருமான செலவுகளை அறிக்கையிட்டிருந்தார். அதனை மையப்படுத்தி, கணக்காளரிடம் நாம் விசாரணை செய்த போது, இன்சாப் அஹமட் எப்போதும் பணத்தை எடுக்கும் போது அதனை என்ன காரணத்துக்காக எடுக்கிறேன் என தெளிவாகக் குறிப்பிடுவார் எனவும், 2019 இல் அவர் நாலரை கோடி ரூபாவை காரணம் குறிப்பிடாது எடுத்துள்ளதாகவும் கணக்காளர் கூறினார். அது தவிர மற்றைய எல்லா சந்தர்ப்பங்களிலும் தமது நிறுவனங்களின் கீழான பணத்தை எடுக்கும் போது காரணத்தை இன்சாப் அஹமட் குறிப்பிட்டுள்ளார். அந்த நாலரை கோடி பணம் தேசிய தௌஹீத் ஜமாத் செயற்பாடுகளுக்கு வழங்ககப்பட்டுள்ளதாக விசாரணைகளில் தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன - என்றார்.

## 2000ஐ...

2,001 ஆக அதிகரித்துள்ளது.

நேற்றுமுன்தினம் 40 தொற்றாளிகள் இனங்காணப்பட்டனர். இவர்களில் 11 பேர் அமெரிக்காவில் இருந்து வந்தவர்கள், ஏனைய 29 பேர் இந்தியாவில் இருந்து வந்தவர்களாவர்.

இந்நிலையில், நோயிலிருந்து மீட்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 1562 ஆக உயர்ந்துள்ளது. இதன்படி 428 பேர் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

## 47,000 மேற்பட்ட...

நிராகரிக்கப்பட்ட வாக்கு விண்ணப்பங்களில் பெரும்பாலானவை அரசு ஊழியர்களுக்கு சொந்தமானவை. ஒருவர், இரு வெவ்வேறு பணியிடங்களில் விண்ணப்பித்தல், போதுமான தகவல்கள் வழங்கப்படாமை மற்றும் தவறான தகவல்களைக் கொடுத்தமைக்காகவே கணிசமானவை நிராகரிக்கப்பட்டன என்றும் தெரிய வருகின்றது.

தேர்தல் நாள் கடமையில் ஈடுபடும் எந்த அதிகாரியின் விண்ணப்பமும் நிராகரிக்கப்படவில்லை என்றும் தேர்தல்கள் திணைக்களம் வலியுறுத்தியுள்ளது.

## ஆட்டம் காணும்...

வகுப்பாளர்களால் பொருளாதார நிகழ்ச்சி நிரல் பற்றி தெளிவான நிலைப்பாட்டை அளிக்க முடியும்.

சர்வதேச இருப்புத் தொகை மே மாத இறுதியில் 650 கோடி அமெரிக்க டொலர்களாக இருந்தது. இது இந்த மாதம் 7.16 கோடி டொலர்களாகச் சரிந்தது. இந்த வருடம் நிலுவையில் உள்ள வெளிநாட்டுக் கடனுடன் ஒப்பிடும் போது இது குறைவாகவே இருக்கிறது.

எதிர்வரும் டிசம்பர் மாதத்துக்கு உள்ளாக இந்தக் கடன் தொகை 380 கோடி டொலர்களாகும். இதில், ஒக்ரோபரில் செலுத்தப்பட வேண்டிய ஒரு பில்லியன் டொலரும் அடங்கும்.

## மிலேனியம்...

எம்.சி.சி உடன்படிக்கை தொடர்பில் அமைக்கப்பட்ட குழு நேற்றுத் தமது இறுதி அறிக்கையை

பிரதமரிடம் கையளித்துள்ளது.

அலரி மாளிகையில் வைத்து இந்த அறிக்கை கையளிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே எம்.சி.சி. உடன்படிக்கையை நிறைவேற்ற மைத்திரிபால சிறிசேன தலைமையிலான

அரசாங்கத்தின் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியிருந்தது.

எனினும் கடந்த ஜனாதிபதி தேர்தலின்போது இந்த உடன்படிக்கையை செய்துகொள்வதற்கு அப்போதைய எதிர்க்கட்சியான தற்போதைய ஆளும் கட்சி கடும் எதிர்ப்பு வெளியிட்டது.

இந்நிலையில் கோட்டாபய தலைமையிலான அரசாங்கம் பதவியேற்ற பின்னர் இந்த உடன்படிக்கையை

செய்துகொள்வது தொடர்பில் ஆராய்வதற்காக குழு ஒன்றை அமைத்தது.

ஏற்கனவே இந்த குழு இடைக்கால அறிக்கை ஒன்றை கையளித்த நிலையில் நேற்று இறுதியறிக்கையை

கையளித்துள்ளது. கொழும்பு பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் லக்சிறி குணருவன் தலைமையிலான நான்கு பேர் குழுவே இந்த அறிக்கையை பிரதமர் மஹிந்த ராஜபக்சவிடம் கையளித்தது.

## நயினை அம்மனை...

செயலகத்தில் நேற்று நடந்த வாராந்த அமைச்சரவைக் கூட்டத்திலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டது.

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா கடந்த 20 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

கொரோனாத் தொற்று அச்சுறுத்தல் காரணமாக 30 பேருக்கே அனுமதி வழங்கப்பட்டது. ஆனால், பெருந்திரளான பக்தர்கள் அங்கு செல்கின்ற போதிலும், கோயிலின் உள்ளே செல்ல அனுமதிக்கவில்லை.

இந்த விடயம் குறித்து நேற்றைய கூட்டத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அமைச்சரவையின் கவனத்திற்கு கொண்டு சென்றார். இதையடுத்து சமூக இடைவெளியைப் பேணியும் - சுகாதாரப் பிரிவினரின் அறிவுறுத்தல்களைப் பின்பற்றியும் பக்தர்கள் கலந்து கொள்ள முடியும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

## பி.சி.ஆர்...

செலுத்தப்பட்டுள்ளது.

ஒருவருக்கு பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்வதற்காக 6,500-8,000 ரூபாய் வரை செலவிடப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

ஈழநாடு
Eelanadu
25.06.2020 வியாழக்கிழமை

“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”
- யோகர் சுவாமிகள்.

gmail:- eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 492 7805

## மாவையின் அரசியல் எதிர்காலம்?

மாவை சேனாதிராசா இலங்கை தமிழ் அரசு கட்சியின் ஆரம்பகால உறுப்பினர்களில் ஒருவர். சாத்வீகப் போராட்டங்களில் பங்குகொண்டு சிறை சென்றவர். கட்சியின் வளர்ச்சிக்காகவும் அதன் முன்னேற்றத்திற்காகவும் அரும்பாடுபட்டவர்களில் ஒருவர். அவர், வடக்கு மாகாண சபையின் முதலமைச்சராக வர விரும்பியிருந்தார். 2013 இல் இடம்பெற்ற வடக்கு மாகாண சபைத் தேர்தலில் முதன்மை வேட்பாளராக மாவையை நியமிக்குமாறு தமிழ் அரசு கட்சியிலுள்ள பலரும் வேண்டுகோள் விடுத்திருந்தனர். மாவைக்கும் அதில் அதிக ஆசையிருந்தது. ஆனால் சம்பந்தன் அந்த ஆசையை நிராசையாக்கினார். ஆனால் மாவையோ, சம்பந்தனுக்கெதிராக போர்க் கொடி தூக்கவில்லை மாறாக, பெட்டிப்பாம்பாகினார். உண்மையில், தமிழ் அரசுக் கட்சியின் வரலாற்றில், சம்பந்தனை விடவும் மாவை மூத்தவர்.

அன்றைய சூழலில் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களும் மாவைக்கு, ஆதரவாகவே வாதாடியிருந்தனர். இன்று விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் கூட்டணிக்காக, தனது கட்சியின் பெயரையும் சின்னத்தையும் மாற்றியிருக்கின்ற, சுரேஸ் பிரேமச்சந்திரன் கூட, அன்று மாவைக்கு ஆதரவாகத்தான் வாதாடியிருந்தார். இது தொடர்பில், கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியொன்றின் தலைவர் இவ்வாறு கூறினார், “நாங்கள் எல்லோருமே மாவை அண்ணனுக்காக பேசிக் கொண்டிருந்தோம். ஆனால், அவர் மட்டும்தான் அவருக்காகப் பேசவில்லை. இறுதியில் சம்பந்தன் தான் நினைத்ததை செய்து முடிந்தார். மாவையின் இந்த அடங்கிப் போகும் பண்பே அவரைப் பலரும் ஏளனமாகப் பார்ப்பதற்கும் காரணமாகியது.”, இந்த நிலைமை கட்சிக்குள்ளும் காணப்படுகின்றது அதே வேளை, பொதுமக்கள் மத்தியிலும் இருக்கின்றது.

ஒருவேளை இந்தத் தேர்தலில் மாவை தோல்வியுற்றால், அவரது அரசியல் வாழ்வு இத்துடன் முடிவுக்கு வரலாம். வடக்கு மாகாணத்தைப் பொறுத்தவரையில் இம்முறை தேர்தல் களத்தில் வழமைக்கு மாறான போட்டி காணப்படுகின்றது. போட்டி வெளியில் மட்டுமல்ல, தமிழ் அரசு கட்சிக்குள்ளும் காணப்படுகின்றது. 2015 நாடாளுமன்றத் தேர்தலின்போது இவ்வாறானதொரு போட்டி இருந்திருக்கவில்லை. இம்முறை வடக்கு மாகாணத்தில் கூட்டமைப்பு இரண்டு ஆசனங்களை இழந்துபோகலாம் என்று பலரும் கூறுகின்றனர். கூட்டமைப்பிலுள்ளவர்கள் மத்தியிலும் அவ்வாறானதொரு அபிப்பிராயமுண்டு. இது ஒரு கணிப்பு மட்டுமே! கணிப்புக்கள் எல்லாம் சரியாகி விடுவதில்லை. ஒருவேளை, அவ்வாறானதொரு நிலைமை ஏற்படுமாக இருந்தால், அந்த இருவர் யார்? - என்பதிலேயே வடக்கின் கூட்டமைப்பு வேட்பாளர்கள் தலையை பிய்த்துக் கொண்டிருக்கின்றனர். பொதுவாகவே தோல்வி ஒருவரை நெருங்கி வருவதான அச்சம் அவருக்குள் தொற்றிக்கொள்ளும்போது, தடுமாற்றங்கள் ஏற்படுவது இயல்பானதே! தற்போது வடக்கு தேர்தல் களத்தில் அவ்வாறானதொரு தடுமாற்றத்தைத் தெளிவாகவே காணமுடிகின்றது.

யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் 7 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுவர். கடந்த தேர்தலை பொறுத்தவரையில், கூட்டமைப்பு இதில் 5 ஆசனங்களை வெற்றிகொண்டது. இதில் மாவை சேனாதிராசாவும் ஒருவர். கடந்த தேர்தலின் போது, அன்றைய அரசியல் சூழல் கூட்டமைப்பிற்கு மிகவும் சாதகமாகவே இருந்தது. ஆட்சி மாற்றம் மக்களுக்கு நம்பிக்கையைக் கொடுத்திருந்தது. ஆனால், தற்போது நிலைமை அப்படியில்லை. மக்கள் மத்தியில் அவநம்பிக்கையான சூழலே காணப்படுகின்றது. கொரோனா, சூழலை மேலும் சிக்கலுக்குள்ளாக்கியிருக்கின்றது.

இவ்வாறானதொரு சூழலில் மீண்டும் 5 ஆசனங்களை கூட்டமைப்பால் வெற்றிபெற முடியுமா என்பது, ஒரு பெரிய கேள்விக்குறியாகும். இவ்வாறானதொரு பின்புலத்தில்தான், தமிழ் அரசு கட்சிக்குள் அண்மைக்காலமாக உள் முரண்பாடுகள் அதிகரித்திருக்கின்றன. இம்முறை இந்த முரண்பாடுகளின் அச்சாணியாக இருப்பவர் எம். ஏ. சுமந்திரன் ஆவார். 2015 தேர்தலின் போது, சுமந்திரனுக்கு ஆதரவாக மாவை செயற்பட்டார். அந்த அடிப்படையில்தான் சுமந்திரனால் வெற்றிபெறவும் முடிந்தது. ஆனால் இம்முறை ஒருவேளை சுமந்திரன் வெற்றிபெற்றால், மாவை ஒருவேளை, வீட்டை விட்டு வெளியேற வேண்டியும் ஏற்படலாம். ஒப்பீட்டடிப்படையில் சுமந்திரன் தனது வெற்றியை இலக்கு வைத்துக் கடுமையமாக உழைத்து வருகின்றார். தாம் வீட்டை விட்டு வெளியில் போக நேரிடுமோ என்னும் அச்சத்தில் நேற்றுவரை நண்பர்களாக இருந்தவர்கள் பலர், இப்போது எதிரிகளாகியிருக்கின்றனர். அவ்வாறானவர்கள் தனித்தும் இணைந்தும் வியூகம் அமைத்து வருகின்றனர். இதில் சுமந்திரன் - சிறிதரன் கூட்டு ஒரு புறமாகவும், மாவை- சரவணபவன் - ஆனல்ட் கூட்டு பிறிதொரு புறமாகவும் இயங்கி வருகின்றது. எப்படியாவது அந்த ஐந்துக்குள் வந்துவிடவேண்டும் என்பதுதான் அனைவரதும் இலக்கு. இந்தத் தேர்தல் வியூகத்தில்,“ இனி தமிழீழம்தான் ஒரே வழியென்று”, எவரேனும் கூறினாலும் கூட, அது ஆச்சரியமானதல்ல.

# கூட்டமைப்பிலிருந்து வெளியேறியோரையும் தேர்தலின் பின் இணைத்துப் பயணிப்போம்

### மாற்றுத் தலைமைக்கு அவசியமில்லை என்கிறார் மாவை




யாழ்ப்பாணம், ஜூன் 25

“துரதிர்ஷ்டவசமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து பலர் வெளியேறியிருப்பது எனக்கு மிகுந்த கவலை அளிக்கிறது. தேர்தல் முடிந்த பின்னர், அவர்களை இணைத்து இந்த நெருக்கடியான காலகட்டத்தில் அடுத்த கட்ட நடவடிக்கைக்கு செல்லவேண்டும் எனும் ஆதங்கத்தோடே நான் உள்ளேன்”

இப்படிக் கூறினார் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை. சேனாதிராசா.

யாழ். ஊடக அமையத்தில் நேற்றுப் புதன்கிழமை ஊடகவியலாளர் சந்திப்பை நடத்தினார். இதன்போது மாற்றுத் தலைமை குறித்து ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பினர்.

இதற்குப் பதிலளித்த அவர் தொடர்ந்தும் தெரிவித்தவை வருமாறு,

நான் ஒரு கட்சியின் தலைவராக இருக்கின்றேன். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் துணைத் தலைவராக இருக்கின்றேன். அவ்வாறு நான் ஒரு கட்சியின் தலைவராக இருந்து கொண்டு மாற்று தலைமை வேண்டும் என்று சொல்வதைப்போல அறிவீனம் வேறு ஏதும் இருக்காது.

இரண்டாவது தமிழ் மக்களிடம் மாற்றுத் தலைமை வேண்டும் என்பது பரவலான செல்வாக்கு மிகுந்த கோரிக்கையாக இன்றில்லை. துரதிர்ஷ்டவசமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து பலர் வெளியேறியிருக்கின்றார்கள் எனக்கு அது மிகுந்த கவலையளிக்கிறது.

தேர்தல் முடிந்ததற்கு பிறகு நாங்கள் அவர்களை இணைத்து இந்த நெருக்கடியான - மோசமான காலகட்டத்தில் அடுத்த கட்ட நடவடிக்கைக்கு செல்லவேண்டும் என்ற ஆதங்கத்தோடே நான் வேலை செய்துகொண்டிருக்கின்றேன்.

மாற்றுத் தலைமை என்பதை ஜனநாயக ரீதியாக யாரும் பேசலாம் - அப்படியான கட்சியாக இயங்கலாம். ஆனால், மக்கள் மத்தியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கட்டாயம் இன்னும் பலமடைய வேண்டும்.

மாற்றுத் தலைமை பற்றி நாங்கள் பேச வேண்டிய அவசியம் இல்லை. அவர்கள் சிறிது சிறிதாக அரசாங்க கட்சியில் இருந்தும், சுயேச்சைகளாகவும் எங்கள் வாக்குகளை பிரிக்கின்றார்கள். அதற்கு இடமளிக்காமல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கே நாங்கள் வாக்களித்து பலத்தை உண்டாக்கவேண்டும்.

அந்த பலத்தோடு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை வெற்றிபெற செய்யவேண்டும் என்ற கருத்தே இன்று வரையிலும் மிகப் பலமாக இருக்கின்றது. எங்களின் தேர்தல் அறிக்கையையும் வேலையையும் முன்வைத்து நாங்கள் பேசினால் வரும் காலத்தில் அது இன்னும் அதிகமாகும்.

மிகப் பெரும்பாலான இடங்களை மக்கள் வெற்றிபெற வைக்கின்ற போது மாற்றுத் தலைமை பற்றிய பேச்சு இல்லாமல் போகும் என்று நினைக்கின்றேன் - என்றார்.



## பலாலி பொலிஸாரின் சேவையை மக்கள் இனி வளலாயில் பெறலாம்

### 24 மணி நேரமும் இயங்கும்

யாழ்ப்பாணம், ஜூன் 25

பலாலி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மக்கள் சேவைகளைப் பெற்றுக் கொள்ள வசதியாக உயர் பாதுகாப்பு வலயத்திற்கு வெளியே வளலாய் அந்தோணிபுரத்தில் தற்காலிகமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

காங்கேசன்துறை பிராந்தியத்துக்குப் பொறுப்பான மூத்த பொலிஸ் அத்தியட்சகர் சேனாதீரவின் வழிகாட்டலில் பலாலி பொலிஸ் நிலைய நடமாடும் பிரிவு என்ற திட்டத்தின் கீழ் பொலிஸ் சேவைகள் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

பலாலி பொலிஸ் நிலையம் உயர் பாதுகாப்பு வலயத்துக்குள் அமைந்துள்ளது. இதனால் விடுவிக்கப்பட்ட பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் அச்சுவேலி, காங்கேசன்துறை மற்றும் தெல்லிப்பழை பொலிஸ் நிலையங்களில் என பொலிஸ் சேவைகளைப் பெற்று வந்தனர்.

இதனால் அவர்கள் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகினர். இந்த விடயம் குறித்து காங்கேசன்துறை பிராந்தியத்துக்குப் பொறுப்பான மூத்த பொலிஸ் அத்தியட்சகர் சேனாதீரவின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது.

இதையடுத்தே பலாலி பொலிஸ் நிலையத்துக்கு நிரந்தரக் கட்டடம் அமைக்கப்படும் வரை பலாலி - வளலாய் அந்தோணிபுரத்தில் நடமாடும் பொலிஸ் பிரிவு ஆரம்பிக்கப்பட்டது. இதன் மூலம் 24 மணி நேரமும் மக்கள் சேவைகளைப் பெறமுடியும் என்று தெரிவிக்கப்பட்டது.

## வாள் வைத்திருந்த இளைஞர்கள் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 25

வீட்டில் வாள் வைத்திருந்த குற்றச்சாட்டில் இரு இளைஞர்களைப் பிடித்த பொலிஸார் அவர்களை விசேட அதிரடிப் படையினரிடம் ஒப்படைத்தனர்.

யாழ்ப்பாணம், கொழும்புத்துறை பகுதியில் படையினர் நேற்று நடத்திய சுற்றிவளைப்புத் தேடுதலின்போதே இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

தேடுதலின்போது வீடு ஒன்றில் இருந்து வாள் ஒன்றைக் கைப்பற்றினர். இதையடுத்து அங்கிருந்த இருவரையும் சந்தேகத்தின் அடிப்படையில் பிடித்துச் சென்றனர்.

அத்துடன் வாளையும் கைதான இளைஞர்களையும் விசேட அதிரடிப் படையினரிடம் ஒப்படைத்தனர். இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் மேற்கொண்டு வருகின்றனர்.

செய்திகள்

# கருணாவைப் போர்க்குற்றச்சாட்டுக்காக எப்பொழுதோ விசாரித்திருக்கவேண்டும்

## மனித உரிமைகள் கண்காணிப்பகம் கூறுகிறது

கொழும்பு, ஜூன் 25

விநாயகமூர்த்தி முரளிதரன் மீது அரசு விசாரணை நடத்த உத்தரவிட்டுள்ளதை நியூயோர்க்கைத் தளமாகக் கொண்ட, மனித உரிமைகள் கண்காணிப்பகம் வரவேற்றுள்ளது.

நீண்ட காலத்துக்கு முன்னரே அவர் போர்க்குற்றங்களுக்காக குற்றவியல் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருக்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ளது.

மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் தெற்காசிய இயக்குனர் மீனாட்சி கங்குலி இதனை தெரிவித்துள்ளார்.

26 ஆண்டுகால ஆயுத மோதலின்போது, சட்டவிரோதமான கொலைகள் மற்றும் பொதுமக்கள் மீதான தாக்குதல்கள் உட்பட எண்ணற்ற கடுமையான மனித உரிமை மீறல்களுக்கு புலிகள் காரணமானவர்கள்.

1990 ஜூன் மாதம் புலிகளிடம் சரணடைந்த பல நூறு பொலிஸ் அதிகாரிகளைச் சுட்டுக்கொல்வதற்கு கருணா கட்டளையிட்டிருந்தார்.

இதற்கு அடுத்த மாதம் சுமார் 75 முஸ்லீம் பயணிகளை அவரது படைகள் கொன்றன. அதே வருடம் ஓகஸ்ட்டில், மட்டக்களப்பு மாவட்டத்தில் 200 க்கும் மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட அவரது படையணி காரணமாக இருந்தது.

2004ஆம் ஆண்டு அவர் புலிகளில் இருந்து பிரிந்து சென்றபோது, அவரது குற்றங்களை அரசு விசாரிக்கவில்லை. மாறாக, அவரது குழு அரச ஆதரவுடன் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டது.

ஐ.நா, மனித உரிமைகள் கண்காணிப்பகம் உள்ளிட்ட பல அமைப்புக்களின் அறிக்கையில், கருணா குழு- பின்னாளில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் என அறியப்பட்ட குழு- பல குற்றச்செயல்களில் ஈடுபட்டதற்கான ஆதாரங்கள் உள்ளன. கடத்தி காணாமல் போகச் செய்தல், சித்திரவதை, குழந்தைகளை கட்டாயமாக படைக்குச் சேர்த்தல் உள்ளிட்ட குற்றச்சாட்டுக்கள் அவர்கள் மேல் உள்ளன.

கருணா செய்த குற்றங்களுக்கு ஒருபோதும் பொறுப்புக் கூறவில்லை. 2007 ஆம் ஆண்டில், அவர் தவறான ஆவணத்தில் லண்டனுக்குப் பயணம் செய்ததமைக்காகக் கைது செய்யப்பட்டார். தனது போலி இராஜதந்திர பாஸ்போர்ட்டை அப்போதைய பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ வழங்கினார் என்று சாட்சியமளித்தார். தற்போது அவர் நாட்டின் ஜனாதிபதி. தற்போதைய பிரதமர் மஹிந்தவின் அரசில் 2009 இல் கருணா அமைச்சராக நியமிக்கப்பட்டார்.

போர்க்குற்றங்கள் மற்றும் பிற கடுமையான மனித உரிமை மீறல்கள் குறித்து இலங்கை அரசு கருணா மீது விசாரணை நடத்தவேண்டும். எவ்வாறாயினும், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவியில் இருப்பதால் கருணா மீண்டும் நீதியிலிருந்து தப்பிப்பார் என்ற கவலைகள் உள்ளன என்று அவர் கூறினார்.

# ரொறன்ரோவில் காணாமற்போன தமிழர்!

மொன்றியல், ஜூன் 25

கனடாவில் இலங்கை தமிழர் ஒருவர் காணாமல் போயுள்ளார் என ரொறன்ரோ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக, ரொறன்ரோ பொலிஸார் அதிகாரபூர்வ டுவிட்டரில் பதிவிட்டுள்ளனர்.

நடராஜா- மகேந்திரராஜா என்ற 52 வயதான நபரை கடந்த 21ஆம் திகதி முதல் காணவில்லை என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

5 அடி 4 அங்குலம் உயரம் கொண்ட அவர் ஒல்லியான உருவம் கொண்டவர் ஆவார். காணாமற்போன அன்று நீல நிறக் காற்சட்டை மற்றும் நீண்ட ஸ்லீவ் ரிசேட் அணிந்திருந்தார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர் குறித்து தகவல் தெரிந்தால் தங்களிடம் தெரிவிக்கலாம் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# பாடசாலைகளில் தொற்று நீக்கி விசிறும் பணி யாழ்ப்பாணத்தில்

யாழ்ப்பாணம், ஜூன் 25

பாடசாலைகள் மீள ஆரம்பிக்கப்படவுள்ள நிலையில் பாடசாலை வளாகத்தில் கிருதித் தொற்று விசிறும் பணிகள் யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்டன.

யாழ்ப்பாணம் பிரதேச செயலர் எஸ்.சுதர்சனின் ஒருங்கிணைப்பில் சிறப்பு அதிரடிப் படையினரால் இந்தப் பணி யாழ்ப்பாணம் திருக்குடும்பக் கன்னியர்மடம் பாடசாலையில் நேற்றுக் காலை ஆரம்பிக்கப்பட்டது

3 மாதங்களுக்கு மேலாக மூடப்பட்டிருந்த பாடசாலைகள் எதிர்வரும் 29ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் 5 கட்டங்களாக மீள ஆரம்பிக்கப்படவுள்ளன.

அதன்படி வரும் 29ஆம் திகதி அனைத்துப் பாடசாலைகளுக்கும் அதிபர், ஆசிரியர்கள் மற்றும் நிர்வாக உத்தியோகத்தர்கள் கடமைக்குத் திரும்பவேண்டும்.

எதிர்வரும் ஜூலை 6ஆம் திங்கட்கிழமை 5,11 மற்றும் 13ஆம் தரங்களில் பயிலும் மாணவர்களுக்கு கல்வி நடவடிக்கைகள் ஆரம்பமாகும்.

எதிர்வரும் ஜூலை 20ஆம் திகதி திங்கட்கிழமை 10 மற்றும் 12ஆம் தரங்களில் கல்வி பயிலும் மாணவர்களுக்கான கல்வி நடவடிக்கைகள் ஆரம்பமாகும்.

அத்தோடு எதிர்வரும் ஜூலை 27ஆம் திகதி திங்கட்கிழமை 3,4,6,7,8,9ஆம் தரங்களில் கல்வி பயிலும் மாணவர்களுக்கான கல்வி நடவடிக்கைகள் ஆரம்பமாகும்.

எனினும் தரம் ஒன்று மற்றும் இரண்டில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு கல்வி நடவடிக்கைகளை ஆரம்பிப்பது தொடர்பில் தீர்மானிக்கப்படவில்லை என்று கல்வி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.






இந்த நிலையில் பாடசாலைகளுக்கு கிருமித் தொற்று நீக்கி விசுறும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் பிரதேச செயலக பிரிவுக்கு உள்பட்ட பாடசாலைகளுக்கு நேற்றுப் புதன்கிழமை தொடக்கம் எதிர்வரும் சனிக்கிழமை வரை பிரதேச செயலர் எஸ். சுதர்சனின் ஒருங்கிணைப்பில் சிறப்பு அதிரடிப் படையினரால் கிருமித் தொற்று நீக்கி விசிறும் பணி முன்னெடுக்கப்படவுள்ளது.

இதன் முதல் பணியாக யாழ்ப்பாணம் திருக்குடும்பக் கன்னியர்மடம் பாடசாலையில் சிறப்பு அதிரடிப் படையினரால் கிருமித் தொற்று நீக்கி விசிறும் பணி நேற்றுக் காலை 8 மணியளவில் ஆரம்பிக்கப்பட்டது.

# புன்னாலைக்கட்டுவனில் ஆலயக் குரு மீது தாக்குதல்!

யாழ்ப்பாணம், ஜூன் 25

புன்னாலைக்கட்டுவன் ஆயக்கடவை சித்தி விநாயகர் ஆலயக் குரு மீது நேற்று முன்தினம் மதியம் இனந்தெரியாத நபர்கள் தாக்குதல் மேற்கொண்டுவிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் ஆலயக் குருவான சுந்தரராஜா குருக்கள் காயங்களுக்கு உள்ளான நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

புனர்நிர்மாண பாலஸ்தாபனம் செய்யப்பட்டு நேற்றுத் திருவிழா இடம்பெற இருந்த நிலையில் இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த ஆலயத்தில் சில ஆண்டுகளாகப் பூசை வழிபாடுகள் குறைவடைந்து இருந்தன. இந்த ஆலயப் பூசகருக்கும்- பரிபாலன சபையினருக்கும் இடையில் ஆலயம் தொடர்பான வழக்கு மல்லாகம் நீதிமன்றில் இடம்பெற்று வந்தது.

நேற்றுத் திருவிழா இடம்பெறவிருந்த நிலையிலேயே இந்த தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை சுன்னாகம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# விமான நிலையங்களை ஓகஸ்ட் 1 திறக்க ஏற்பாடு

கொழும்பு, ஜூன் 25

கட்டுநாயக்க மற்றும் மத்தள சர்வதேச விமான நிலையங்கள் எதிர்வரும், ஓகஸ்ட் 1ஆம் திகதி மீளத் திறக்கப்பட வுள்ளதாக விமான நிலைய வட்டாரங்கள் தகவல் வெளி யிட்டுள்ளன.

கொரோனா வைரஸ் தொற்றை அடுத்து, கட்டுநாயக்க, மத்தள பலாலி போன்ற சர்வதேச விமான நிலையங்கள் ஊடாக, சுற்றுலாப் பயணிகள் உள்ளிட்ட வழக்கமான போக்கு வரத்துகள் தடைப்பட்டுள்ளன.

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்று கட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ள நிலையில், சுற்றுலாப் பயணிகளுக்காக, கட்டுநாயக்க மற்றும் மத்தள சர்வதேச விமான நிலையங்களை எதிர்வரும், ஓகஸ்ட 1ஆம் திகதி மீளத் திறக்க அரசு முடிவு செய்துள்ளது.

இந்த நிலையில் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 1ஆம் திகதி கட்டுநாயக்க விமான நிலையத்தைத் திறப்பதற்கு முன்னதாக, அங்கு நான்கரைக் ரூபா பெறுமதியான நவீன சோதனைக் கருவிகள் பொருத்தப்படவுள்ளதாகச் செய்திகள் கூறுகின்றன.

ஜப்பான், அவுஸ்திரேலியா நாடுகளிடம் இருந்து கிடைத்துள்ள நிதியைக் கொண்டு இந்த நவீன வசதிகள் ஏற்படுத்தப்படவுள்ளதாகவும், தெரிவிக்கப்படுகிறது.

விளையாட்டுச் செய்திகள்




## சி.பி.எல் தொடரிலிருந்து விலகினார் கிறிஸ் கெய்ல்

ஜமேக்கா, ஜூன் 25.

நடப்பு ஆண்டுக்கான கரீபியன் பிறீமியர் லீக் (சி. பி.எல்.) ரி-20 தொடரில் இருந்து பிரபல வீரர் கிறிஸ் கெய்ல் விலகுகிறார் என்று அறிவித்துள்ளார்.

இந்த ஆண்டுக்கான சி.பி. எல். தொடரில் அவர் ஜமேக்கா அணியில் இருந்து சென். லூ சியா அணிக்கு மாறினார். கெய்லை ஜமேக்கா அணி தக்க வைக்க விரும்பாமையே அணி மாற வேண்டி ஏற்படக் காரணம்.

இந்தத் தொடரில் முதல் நான்கு வருடங்கள் ஜமேக்கா அணிக்காகவும் அடுத்த இரு வருடங்கள் வேறு அணிக்காக வும் விளையாடினார். இந்நிலை யில் மீண்டும் ஜமேக்கா அணியில் விளையாடினார். கடந்த வருடம் 10 போட்டிகளில் அவர் 243 ஓட்டங்களையே எடுத்தார். ஜமேக்கா அணியும் இறுதி இடத்தையே பிடித்தது.

இந்நிலையில் ஜமேக்கா அணியில் இருந்து நீக்கப்பட்ட மைக்குக் காரணம் ராம்நரேன் சர்வான்தான் காரணம் என்றும், அவரை கொரோனாவை விட மோசமானவர் எனவும் சாடியிருந்தார். இது பின்னர் பெரும் சர்ச்சையாக வெடித்தது. இதைத் தொடர்ந்து கெய்ல் மன்னிப்புக் கேட்டார்.

இந்நிலையிலேயே தனிப்பட்ட சில காரணங்களால் சி.பி.எல். தொடரில் இருந்து தான் விலகுகிறார் என்று கிறிஸ் கெயில் அறிவித்துள்ளார்.

சி.பி.எல். போட்டி எதிர்வரும் ஓகஸ்ட் 18 முதல் செப்ரெம்பர் 10 வரை நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.




## 50 ஆண்டுகளில் சிறந்த டெஸ்ட் வீரர் டிராவிட்!

புதுடில்லி, ஜூன் 22

கொரோனா தொற்றால் தடைப்பட்ட கிரிக்கெட் போட்டி இன்னமும் ஆரம்ப மாகவில்லை. இந்நிலையில் வீரர்கள் பலரும் சமூகவலைத் தளத்தில் இயங்கி வருகின்றனர்.

இந்நிலையில் பிரபல இதழான விஸ்டன் இந்தியா கடந்த 50 வருடங்களில் இந்தியாவின் சிறந்த டெஸ்ட் துடுப்பாட்ட வீரர் யார் என்ற கருத்துக் கணிப்பை நடத்தியது.

14 பேர் கொண்ட இந்தப் பட்டியலில் இறுதியாக சச்சின் டெண்டுல்கர், ராகுல் டிராவிட், சுனில் கவாஸ்கர், விராட் கோலி ஆகியோர் தெரிவாகினர். இவர்களில் ஒருவரைத் தெரிவு செய்வதற்காக 11 ஆயித்து 400 பேர் வாக்களித்தனர்.

இதில் ராகுல் டிராவிட், சச்சின் டெண்டுல்கரைப் பின்தள்ளி 52 வீத வாக்குகளைப் பெற்று முதலிடத்தைப் பிடித்தார்.

ராகுல் டிராவிட் 1996 முதல் 2012 வரை 164 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 13,288 ஓட்டங்களைக் குவித்துள்ளார். அவரின், சராசரி 52.31 ஆகும். இதில் இந்தியாவுக்கு வெளியே 94 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 7,690 ஓட்டங்களைப் பெற்றிருந்தார்.

# ஜொகோவிச்சுக்கு கொரோனா!



பெல்கிரேட், ஜூன் 25

உலகின் முதல்நிலை ரென்னிஸ் வீரர் ஜொகோவிச்சும் அவரது மனைவி ஜெலினாவும் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஜொகோவிச் அட்ரியா ரூர் என்ற பெயரில் நிதி சேகரிப்பு கண்காட்சி ரென்னிஸ் போட்டியை சேர்பியா, குரோஷியா நாடுகளின் முக்கிய இரு நகர்களில் நடத்தினார்.

இந்தப் போட்டியில் பங்கேற்ற கிரிகோர் டிமிட்ரோவ், போர்னோ கொரிச் ஆகியோருக்கு கொரோனா தொற்று இருப்பது தெரிய வந்தது. இதையடுத்து போட்டி நிறுத்தப்பட்டது.

இந்நிலையில், போட்டியை முன்னின்று நடத்திய ஜொகோவிச்சுக்கும் அவரது மனைவி ஜெலினாவுக்கும் கொரோனா தொற்றியிருப்பது பரிசோதனைகளில் உறுதியானது. அதிர்ஷ்டவசமாக அவர்களின் பிள்ளைகள் இருவரும் தொற்றால் பாதிக்கப்படவில்லை.

இது தொடர்பில் ஜொகோவிச் வெளியிட்ட அறிக்கையில், "எனக்கு கொரோனா தொற்றியிருப்பது உறுதி. ஆனால், எந்த அறிகுறியும் தென்படவில்லை. கொரோனாவால் பாதிக்கப்பட்ட மற்றவர்களுக்காக வருந்துகிறேன். அவர்கள் எந்தச் சிக்கலுமின்றி மீள்வார்கள் என்று நம்புகிறேன். 14 நாட்கள் என்னைத் தனிமைப்படுத்துவேன். அதன் பின் 5 நாட்கள் கழித்து மீண்டும் சோதனை செய்வேன்", - என்றார்.

இதேவேளை, இந்த கண்காட்சி ரென்னிஸ் போட்டியில் சமூக இடைவெளி காற்றில் பறந்திருந்தது. ஒருவருக்கொருவர் கைகுலுக்குவதையும், கட்டித்தழுவதையும் சகஜமாகக் காணமுடிந்தது. இரவில் வைக்கப்பட்ட விருந்தில் கலந்து கொண்ட வீரர்கள் நடனம் ஆடி கும்மாளம் போட்டனர். இதனால் கொரோனா எளிதில் பரவி விட்டது. ஜொகோவிச்சே இதற்கு பொறுப்பு என்றும் விமர்சனங்கள் எழுந்துள்ளன.

## 10 பாகிஸ்தான் வீரர்களுக்கு கொரோனா தொற்று உறுதி!

இஸ்லாமாபாத், ஜூன் 25

பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர் களில் 10 பேருக்கு கொரோனா தொற்று இருப்பது பரிசோத னைகளில் உறுதியாகியுள்ளது.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணி இங்கிலாந்துக்கு சுற்றுப் பயணம் செய்து 3 டெஸ்ட், 3 ருவென்ரி - 20 போட்டிகளில் விளையாடவுள்ளது.

ஓகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள இந்தத் தொடருக்காக 29 வீரர்கள் தெரிவு செய்யப்பட்டனர். இவர்கள் வரும் 28 ஆம் திகதி லண்டன் புறப்படவிருந்தனர்.

வீரர்கள் இங்கிலாந்துக்குப் புறப்பட முன்னர் இரு தடவைகள் அவர்களுக்கு கொரொனா தொற்றுப் பரிசோதனை நடத்த முடிவு செய்யப்பட்டது. இதன்படி அவர்களுக்கு இரு தடவைகள் பரிசோதனை நடத்தப்பட்டது.

இதன் முடிவில், சகலதுறை வீரர் முஹமது ஹபீஸ், வேகப்பந்து வீச்சாளர் வஹாப் ரியாஸ், புதுமுகவீரர் ஹைதர் அலி, சுழற்பந்து வீச்சாளர் ஷதப் கான் மற்றும் பஹார் ஜமான், முஹமது ரிஸ்வான், ஹரிஸ் ரவுப், காஷிப் பாட்டி, முஹமது ஹஸ்னைன், இம்ரான் கான் ஆகிய 10 வீரர்களுக்கு கொரோனா தொற்று இருப்பது உறுதியானது.

அத்துடன், அணியின் உதவியாளர் ஒருவரும் பாதிக்கப்பட்டு உள்ளார். சோதனைக்கு முன்பு வரை இவர்களுக்கு எந்த அறிகுறியும் தென்படவில்லை. இதையடுத்து இவர்கள் 14 நாட்களுக்கு தனிமைப்படுத்தப்பட்டனர். கொரோனா பாதிப்பில் இருந்து குணமடைந்ததும் அவர்கள் அணியுடன் இணைவார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே பாகிஸ்தான் முன்னாள் கப்டன் சஹீட் அப்ரிடி கொரோனாவால் பாதிக்கப்பட்ட நிலையில் மேலும் 10 வீரர்கள் கொரோனாவில் சிக்கியமை பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

மேலும், பாதிப்பு இல்லாத மற்ற வீரர்கள் அனைவரையும் உயர் பாதுகாப்பு வலயத்துக்குள் கொண்டு வந்து இன்று மீண்டும் பரிசோதனைக்கு உட்படுத்தப்படவுள்ளனர்.







## நியூசிலாந்து பங்களாதேஷ் தொடர் பிற்போனது

டாக்கா, ஜூன் 25

நியூசிலாந்து - பங்களா தேஷ் அணிகளிடையேயான இரு டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடர் பிற்போடப் பட்டுள்ளது.

நியூசிலாந்து அணி, எதிர்வரும் ஓகஸ்ட் - செப்ரெம்பர் மாதத்தில் பங்களாதேஷுக்கு கிரிக்கெட் சுற்றுப் பயணம் செய்வதாக இருந்தது.

ஆனால், அந்நாட்டில் கொரோனா தொற்று நோயின் தாக்கம் அதிகமாக உள்ளது. அண்மையில்கூட, பங்களாதேஷின் முன்னாள் அணித் தலைவர் மோட்ரஷா உட்பட 3 வீரர்கள் தொற்றுக்கு இலக்காகினர்.

இவ்வாறான நிலையில், நியூசிலாந்து அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரை நடத்துவது பாதுகாப்பு இல்லை என்பதை உணர்ந்து அந்நாட்டு கிரிக்கெட் சபை, நியூசிலாந்து கிரிக்கெட் சபையின் சம்மதத் துடன் தொடரை காலம் குறிப்பிடாமல் பிற்போடுவதாக அறிவித்துள்ளது.

செய்திகள்

# மன்னாரிலிருந்து 2500 வாக்குகள் புத்தளத்துக்கு!




மன்னார், ஜூன் 25

இம்முறை தேர்தலில் கடந்த தேர்தலுடன் ஒப்பிடும் போது சுமார் 2 அயிரம் 500 வாக்கா ளர்களின் எண்ணிக்கை குறை வடைந்துள்ளது. இதற்கான காரணம் புத்தளம் மாவட்டத் தில் நிரந்தர வதிவிடங்களைக் கொண்டவர்களின் பெயர்கள் இங்கிருந்து புத்தளம் மாவட்டத்திற்கு மாற்றப்பட்டமையால் இந்தக் குறைவு ஏற்பட்டுள்ளது என மன்னார் மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் ஜே.ஜெனிற்றன் தெரிவித்தார்.

எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலுக்கான முன் ஆயத்தம் தொடர்பாக விசேட கலந்துரையாடல் நேற்றுப் புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் மன்னார் மாவட்ட செயலகத்தின் ஜெயிக்கா மண்டபத்தில் இடம் பெற்றது.

ஊடகவியலாளர்கள் மற்றும் தேர்தல் கண்காணிப்பாளர்களுக்கு இடையில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது.

அதனைத் தொடர்ந்து ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கையிலேயே மன்னார் மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் ஜே.ஜெனிற்றன் அவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலை மன்னார் மாவட்டத்தில் நீதியானதும், நேர்மையானதும், சுகாதார வழிமுறைகளைப் பின் பற்றியும் இந்தத் தேர்தலை நடத்த நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம். தற்போது மன்னார் மாவட்டத்துக்கான தேர்தல் முறைப்பாட்டு நிலையத்தை ஆரம்பித்து கடந்த புதன்கிழமை முதல் மாவட்ட மத்திய முறைப்பாட்டு நிலையம் இயங்கி வருகின்றது.

இந்த முறைப்பாட்டு நிலையத்தின் தொலைபேசி இலக்கம் - 023-2223820. இந்தத் தொலைபேசி இலக்கத்தின் ஊடாகவும் முறைப்பாடுகளைப் பதிவு செய்ய முடியும். அதற்குப் பொறுப்பாக மன்னார் மாவட்ட உதவி திட்டமிடல் பணிப்பாளர் எல்.ஜே.றொகான் குரூஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.

நேரடியாக தேசிய தேர்தல் முறைப்பாட்டு நிலையத்திலும் தங்களுடைய முறைப்பாடுகளையும் பதிவு செய்ய முடியும். அல்லது 011-2886179 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாகவும் முறைப்பாடு செய்ய முடியும். தற்போது தேர்தல் பிரசார அலுவலகங்கள் மாவட்ட மட்டத்தில் திறக்கப்பட்டு வருகின்றது.

அதற்கான விண்ணப்பங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டு அதற்கான அனுமதியும் வழங்கப்பட்டு வருகின்றது. இந்த முறை அனுமதி வழங்கப்படும் போது பொலிஸ ார் மற்றும் சுகாதார பிரிவினர் ஆகியோரின் ஆலோசனைக்கு அமைவாக அனுமதிகள் வழங்கப்படும்.

அதனடிப்படையில் மத்திய தேர்தல் அலுவலகம், கிளை அலுவலகங்களை தற்போது தொடக்கம் அரசியல் கட்சிகள், சுயேட்சைக் குழுக்கள் திறந்து வருகின்றனர்.

இவற்றை விட மன்னார் மாவட்டத்தில் இம்முறை 88 ஆயிரத்து 842 வாக்காளர்கள் வாக்களிக்க உள்ளனர். அந்த வகையில் அனைத்து வாக்காளர்களும் சுகாதார நடை முறைகளை கருத்தில் கொண்டும், நாட்டின் எதிர் காலத்தை கருத்தில் கொண்டும் வாக்களிப்பில் இருந்து தவறாமல் அனைவரும் உற்சாகமாக வாக்களிப்பு நிலையங்களுக்குச் சென்று வாக்களிக்க வேண்டும்.

தபால் மூல வாக்களிப்பை பொறுத்தவகையில் 4 ஆயிரத்து 255 தபால் மூல வாக்களிப்பு விண்ணப்பங்கள் கிடைத்துள்ளது. அவற்றில் 59 விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

மொத்தமாக 4 ஆயிரத்து 196 பேர்கள் தபால் மூலம் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர். தபால் மூல வாக்களிப்பிற்கான வினியோகம் எதிர் வரும் 30 ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெற உள்ளது.

இம்முறை தேர்தலில் கடந்த தேர்தலுடன் ஒப்பிடும் போது சுமார் 2 அயிரம் 500 வாக்காளர்களின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளது. இதற்கான காரணம் புத்தளம் மாவட்டத்தில் நிறந்தர வதிவிடங்களை கொண்டவர்களின் பெயர்கள் இங்கிருந்து புத்தளம் மாவட்டத்திற்கு மாற்றப்பட்டமையினால் இந்தக் குறைவு ஏற்பட்டுள்ளது.

ஏனைய வாக்குச் சீட்டுக்கள் அனைத்தும் தற்போது கிடைக்கப் பெற்றுள்ளது. எதிர் வரும் ஓகஸ்ட் 5 ஆம் திகதி நடைபெற உள்ள தேர்தலில் அனைவரும் கலந்த கொண்டு சுகாதார நடைமுறைகளை பின்பற்றி வாக்களியுங்கள்- என்றார்.

# சர்ச்சையில் சிக்கிய இராணுவத் தளபதி!

கொழும்பு, ஜூன் 25

இராணுவத் தலைமையகத் தில் முதன்மை தலைமை அதிகாரிகளின் ஏற்பாட்டில், இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சவேந்திர சில்வா நேற்று முன் தினம் தனது 56 ஆவது பிறந்த நாளை கேக் வெட்டி கொண்டாடியுள்ளார்.

இந்த நிகழ்வில், இராணுவத் தலைமையகத்தின் உயர்மட்ட தளபதிகளான, மேஜர் ஜெனரல்கள் பங்குபற்றியிருந்தனர். எனினும், அவர்கள் கொரோனா தொற்று தொடர்பான சுகாதார வழிகாட்டு முறைகளைப் பின்பற்றவில்லை என்ற சர்ச்சை எழுந்துள்ளது.




இராணுவத் தளபதியின் பிறந்த நாள் கொண்டாட்டத் தின்போது, உயர்மட்ட படைத் தளபதிகள் முக கவசங்களை அணியவில்லை என்பதுடன், சமூக இடைவெளியையும் பேணவில்லை.

கொரோனா தொற்று பரவலுக்கு எதிரான ஜனாதிபதி செயலணியின் தலைவராக இருக்கும் இராணுவத் தளபதியே , அதனைத் தடுப்பதற்கான சுகாதார வழிகாட்டு முறைகளைப் பின்பற்றாமல் பிறந்தநாள் கொண்டாட்டத்தில் ஈடுபட்டிருப்பது சர்ச்சைகளை ஏற்படுத்தியுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

# இராணுவ மயப்படுத்தலை அரசு மறுபரிசீலனை செய்யவேண்டும்

## துரைராசசிங்கம் கோரிக்கை



மட்டக்களப்பு, ஜூன் 25

ஜனாதிபதி இந்த நாட்டில் சிங்கள பௌத்த தேசிய வாதத் தைப் பரப்ப முற்படுவது நல்லிணக்கத்தை ஏற்படுத்த மாட்டாது என இலங்கை தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளரு மான கிருஷ்ணபிள்ளை துரைராசசிங்கம் தெரிவித்தார்.

அரசு ஜனநாயகத்தைப் பேணுவதுடன் நிர்வாகத் துறை கள் இராணுவ மயமாக் கலை மறுபரிசீலனை செய்ய வேண் டும் என்றும் அவர் கூறினார்.

மட்டக்களப்பு நல்லையா வீதியிலுள்ள இலங்கைத் தமிழ ரசுக் கட்சி அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவிய லாளர் மாநாட்டில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்-

நடைபெறவுள்ள நாடாளு மன்றத் தேர்தலில் அரசு தமது பலத்தை கூடுதலாகப் பிரயோ கிக்கும் என்ற நிலைமை தற் போது உள்ளது. சர்வதேச கண் காணிப்புக்குழுக்களின் மேற் பார்வையில் தேர்தல்கள் நடத் தப்படவேண்டும் அப்போது தான் ஜனநாயகத் தேர்தலாக இருக்கும். இந்த விடயத்தில் அரசு இன்னும் சரியான கரிசனை காட்டவில்லை.

அரசு இந்த நாட்டில் ஜன நாயகத்தைப் பேணவேண் டும். இராணுவ மயப்படுத்தப் படுகின்ற இந்த நிலைமையை மறுபரிசீலனை செய்ய வேண் டும். ஜனாதிபதி முற்று முழுதா கச் சிங்கள பௌத்த தேசிய வாதத்தை இந்த நாட்டிலே பரப்புவது நல்லிணக்கத்தை ஏற்படுத்த மாட்டாது என்ற விடயத்தைக் கருத்தில் கொள்ளவேண்டும்.

இந்த நாட்டிலுள்ள சகல மக்களுக்கும் உரிமை வழங்கக் கூடிய விதத்தில் அரசியல் செயற்பாடுகளை ஜனாதிபதி மற்றும் அவருடைய கட்சியும் செயற்படவேண்டும்.

தமிழ் மக்களைப் பொறுத்த வரை போர் தொடர்பான விட யத்துக்கும் இன்னும் முடிவு கிடைக்கவில்லை. பொறுப்புக் கூறுதல் விடயத்தில் ஐக்கிய நாடு கள் சபையில் வைக்கப்பட்டுள்ள தீர்மானம் தொடர்பில் அரசு சரியான பதிலை வழங்க வில்லை. அதிலிருந்து பின் வாங்குவதாக கூறியுள்ளார்கள்.

சர்வதேச மட்டத்தில் இவ்வாறான ஒரு விடயத்தில் ஒருவரும் பின்வாங்க முடி யாது. அதனுடைய செயற் பாடுகள் தொடர்ந்தும் நடை பெற்றுக்கொண்டே இருக்கும். பொறுப்புக் கூறலுக்கும் இணக் கம் தெரிவிக்காமல் விட்டால் அது மாற்று வகையில் நிச்சய மாக கையாளப்படும்.

இலங்கையை ஒரு நாடாக வைத்துக்கொண்டு மக்கள் எல்லோரும் சமமானவர்கள் என்ற அடிப்படையில் இந்த நாட்டை ஆட்சி செய்வதற்கு அரசு முயற்சிக்க வேண்டும். தற்போதுள்ள செயற்றிட்டங்களை மறு பரிசீலனை செய்து கொண்டு எல்லோருக்கும் சம உரிமை வழங்கக்கூடிய விதத்தில் ஒரு புதிய அரசமைப்புச் சட்டத்தை உருவாக்குகின்ற எங்களது கோரிக்கைக்கு அரசு கவனம் செலுத்த வேண்டும்-என்றார்.

# மஹிந்தானந்த அளுத்கமகேயிடம் நேற்று அதிகாலையில் விசாரணை

கொழும்பு, ஜூன் 25

முன்னாள் அமைச்சர் மஹிந் தானந்த அளுத்கமகேவிடம், இன்று காலை 6 மணிக்கு விசேட பொலிஸ் குழுவொன்று வாக்குமூலம் பதிவு செய்து கொண்டுள்ளதாகத் தெரிவிக் கப்படுகிறது.

2011ஆம் ஆண்டு உலக கிண்ண இறுதிப் போட்டியில் ஆட்ட நிர்ணயக் குற்றச்சாட்டு தொடர்பாகவே அவரிடம் இதன்போது வாக்கு மூலம் பதிவு செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் தொலைக் காட்சி நிகழ்ச்சியொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த முன்னாள் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே, 2011 ஆம் ஆண்டு உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரின் இந்தியாவுடனான இறுதிப் போட்டியில், பணத்துக்காகக் கிண்ணத்தை தாரை வார்த்ததாகத் தெரிவித்தார்.

இந்தியாவுடனான இறுதிப் போட்டியில் கிண்ணத்தை வெற்றி கொள்வதற்கான தகுதி இலங்கை அணியிடம் காணப்பட்ட போதிலும், பணத்துக்காக அது தாரை வார்க்கப்பட்டதைத் தாம் பொறுப்புடன் கூறுவதாகவும் இந்த விடயம் தொடர்பாக விவாதத்தில் ஈடுபடவும் தாம் தயாராகவுள்ளார் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இந்நிலையில், இந்த விடயம் தற்போது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள நிலையில், மஹிந்தானந்த அளுத்கமகேயின் நாவலப்பிட்டியில் உள்ள காரியாலயத்துக்கு விசேட பொலிஸ் குழுவொன்று சென்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாகம் – 26

தயாளன்

# கூட்டமைப்பின் உருவாக்கம் எப்படி நிகழ்ந்தது?

ஆற்றில் தொழில் செய்பவர்கள் தோணியைக் கரையில் விட்டு சவளைக் (துடுப்பு ) கொண்டு போய் விடுவார்கள். இவர்கள் இருவரும் அந்தத் தோணிகளில் ஒன்றையும், ஊன்றிப் பயணிப்பதற்காக நீண்ட தடியையும் எடுத்துக்கொண்டு ஆற்றுக்குள் இறங்கினர். சில நிமிடத்தில் தமக்குப் பின்னால் இன்னொரு தோணியும் ஆற்றுக்குள் பயணிப்பதைக் கண்டனர். அவர்களும் இவர்களைப் போலவே சவள் இல்லாமல் வந்தனர். அவர்கள் ஈ.பி.ஆர்.எல்.எவ்வினர். பண்டரியாவெளியை நோக்கிப் பயணிப்பதே இரு தரப்பினரினதும் நோக்கம். ஆற்றின் மறுகரையை அடைந்ததும் தோழர் தோழர் என்று உரையாடிக்கொண்டே வந்தனர் ஈ.பி.ஆர்.எல்எவ்வினர். அவ்வேளை வழமையாகப் போகும் பாதையை விடுத்து இன்னொரு வழியைக்காட்டி "இது கிட்டப் பாதை" என்றார் அவர்களில் ஒருவர். முன்னே சென்ற ஒரு தோழர் அவ்வழியாக நாலைந்து அடி வைத்ததும் திடீரென ஒரு பள்ளத்தில் விழுந்து விட்டார். உடனே டேய் ....." என்று தூஷணத்தால் புது வழியைக் காண்பித்தவரைக் கடிந்து கொண்டார் அந்தத் தோழர்.

அப்போதுதான் புலிகளுக்கு ஒரு உண்மை புரிந்தது - இவர்கள் தோழர் என்ற சொல்லை உதட்டளவிலேயே உச்சரிக்கின்றனர். உள்ளத்திலிருந்து அல்ல. உள்ளத்தில் அது ஆழமாகப் பதிந்திருந்தால் பள்ளத்தில் விழுந்ததுமே 'தோழர்' என்றல்லவா அலறியிருக்க வேண்டும்? பிடல்கஸ்ரோ, சேகுவரா, லெனின் முதலான மகத்தான மனிதர்களின் வாயிலிருந்து இந்தச் சொல் உச்சரிக்கப்பட்டபோது அதற்கு ஒரு கௌரவமான அந்தஸ்து இருந்தது. அந்தச் சொல்லின் ஆன்மாவையே கொன்று விட்டன ஈழப் போராட்டத்தில் இறங்கிய சில இயக்கங்கள்.

சொற்களின் அர்த்தங்கள் காலத்துக் குக் காலம் மாற்றமடைவதுண்டு "நாற்றம்" சொல்லுக்கு நறுமணம் என்று அர்த்தம். நாறும் பூ நாதர் என்றும் ஒரு கோவிலிலுள்ள சிவன் அழைக்கப்படு கின்றார். காலப்போக்கில் நாற்றம் என்பதற்கு துர்மணம் என்று பொருள் கொள்ளும் நிலை உருவானது. அது போலவே தோழர் என்ற சொல்லையே எதிர்கால அகராதியில் அருவருப்பா கவோ சந்தேகமாகவோ பார்க்கும் நிலையை இவர்கள் உருவாக்கி விட்டனர்.

• • •

**பத்மநாபாவை நேரில் எச்சரித்த பிரபாகரன் !**

அடுத்த முரண்பாடு வவுனியாவில் இடம்பெற்றது. அங்குள்ள ஒரு அரிசி ஆலைக்கு நிதி சேகரிப்புக்காக சென்ற னர் ஈ.பி.ஆர்.எல்.எவ்வினர். ஆலை சொந்தக்காரர்கள் புலிகளின் ஆதரவா ளர்கள். எனவே நாங்கள் புலிகளுக்கு மட்டுமே நிதி வழங்குவோம் எனக் கூறினர். இதனால் வார்த்தைகள் தடித்து முரண்பாடு ஏற்பட்டது. திரும் பிச் சென்றவர்கள் துப்பாக்கி எடுத்துக் கொண்டு வந்து உயிர்ப் பலியெடுத்தனர். இச் சம்பவம் தொடர்பாக சென்னை அடையாறிலிருந்த புலிகளின் தலைமைப் பணிமனையில் ஒரு சந்திப்பு நடைபெற்றது. மகிழடித்தீவுச் சம்பவத்தையும் அவர்களுக்குச்


சுரேன்

சுட்டிக்காட்ட வேண்டுமெனப் பிரபாகரன் நினைத்தார். அப்போது தமிழகத்துக்குச் சென்றிருந்த பசீரையும் அழைத்துக்கொண்டு சென்றார். ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்ன ணியின் மத்திய குழு உறுப்பினரும், அதன் செயலாளர் நாயகமும், புரட்சிகர இராணுவக் கமிஷன் தலைவரும் எனக் குறிப்பிடப்படும் தோழர். பத்மநாபாவும் இன்னொருவரும் இச் சந்திப்பில் கலந்து கொண்டனர்.

"தும்பு பறந்த பேச்சு" என்று சொல்வார்களே அதுதான் நடந்தது. பேச்சுவார்த்தை என்று அதைச் சொல்ல முடியாது. "ஓம் தம்பி ஓம் தம்பி" என்பதைத் தவிர வேறு எதையும் பத்மநாபாவின் வாய் உச்சரிக்கவில்லை. குறிப்பிட்ட நாள் அவகாசம் கொடுத்தார் பிரபாகரன். அதற்குள் நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லையேல் நாங்கள் நடவடிக்கை எடுப்போம் என ஆணித்தரமாகக் கூறினார். மகிழடித்தீவுச் சம்பவம் புலிகள் மீது பழி சுமத்தும் திட்டமிட்ட நடவடிக்கை எனவும் இது தொடர்பாகப் பசீரிடம் மேலதிக விபரங்களைப் பெற்றுக் கொள்ளுமாறும் கூறிவிட்டுப் புறப்பட்டார். தமது தவறினை ஒப்புக்கொண்டு குறிப்பிட்ட வவுனியாச் சம்பவத்தில் சம்பந்தப்பட்ட உறுப்பினரை தமது இயக்கத்திலிருந்து விலத்துவதாக பகிரங்கமாக ஊடகங்கள் மூலம் தெரிவிப்பார்கள் என்றே அவர் எதிர்பார்த்தார். ஆனால் அச் சம்பவத்தை நியாயப்படுத்தவும் வகையிலேயே அறிக்கை வந்தது.

புலிகளைப் பொறுத்தவரை ஒருவரை இயக்கத்திலிருந்து விலத்துவதே அதி உயர் தண்டனையாகக் கருதப்பட்டது. பாலியல் குற்றம் மற்றும் நிதி மோசடி, துரோகம் போன்றவற்றுக்கே மரண தண்டனை. காலப் போக்கில் துரோகத் துக்கு மட்டுமே கட்டாயம் மரண தண்டனை. குற்றத்தைப் பொறுத்து ஏனையவற்றில் நெகிழ்ச்சிப் போக்கு இருந்தது. ஆனாலும் அது பாரதூரமான தாக இருந்தால் மரண தண்டனைதான். ஒருவர்தானாக இயக்கத்திலிருந்து விலகு வது என்பது வேறு. அது சம்பந்தப்பட்ட போராளி எடுக்கும் முடிவு.

அதற்கு போராட்டத்தின் மீதான சலிப்பு, பொறுப்பாளர் மீதான அதிருப்தி, குடும்ப நிலைமை போன்ற பல்வேறு காரணங்கள் இருக்கலாம். ஆனால் ஒருவன் இப்பிறவியில் போராட்டத்தில் பங்குபற்றத் தகுதியற்றவன் - அநீதிக்கு எதிராகத் தனது எதிர்ப்பைத் தெரிவிக்க முடியாமல் அடங்கியிருக்க வேண்டியவன் என்று உணர்த்துவது மிகவும் கூடுதலான தண்டனை. அவன் போராடும் தகுதி படைத்த ஏனையோர் முன்னிலையில் அற்பப் புழுவாகப் கருதப்படுவான்.


அமீன்

இந்த விடயத்தில் தண்டனை வழங்க வேண்டியது ஈ.பி.ஆர்.எல்.எவ். அதை வழங்கும் முடிவை எடுக்க அவர்கள் தயாராக இருக்கவில்லை. தனது எச்சரிக்கையையும் பொருட்படுத்தவில்லை. எனவே அடுத்து மேற்கொள்ள வேண்டியது என்ன என்பதை வன்னியிலிருந்த போராளிகளுக்கு அறிவித்தார் பிரபாகரன். விளைவு இதில் சம்பந்தப்பட்ட ரீகன் என்பவரின் ஆயுள் முடிந்தது. அவரது சட்டைப்பையில் இருந்த ரூபாய் நோட்டையும் ஒரு ரவை துளைத்துச் சென்றது. அதனை நினைவுச் சின்னமாக எடுத்துக் கொண்டார் டக்ளஸ் தேவானந்தா. திலீபனுடனான சந்திப்புக்களின் போது இதனை அவர் குறிப்பிடுவதுண்டு.

• • •

**கோட்டைப் பகுதியில் ஏற்பட்ட உயிரிழப்பு!**

ஐந்தாவது முரண்பாடு யாழ் கோட்டைக்கு வெளியேயான காவலரண் பகுதியில் நடைபெற்றது. இரவு நேரம் காவலில் இருந்த படையினர் மீது தாக்குதல் நடத்தப் பதுங்கிப் பதுங்கிச் சென்ற ஈ.பி.ஆர்.எல்.எவ்வினர் புலிகளின் பக்கமாக வந்து விட்டனர். படையினரின் சீருடையை ஒத்ததாக அவர்களின் உடையும் காணப்பட்டது. இதனால் காவலரணில் இருந்த புலிகள் உறுப்பினர் ஒருவர் இவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தார். இதில் அமீன் என்ற ஈ.பி.ஆர்.எல்.எவ் உறுப்பினர் உயிரிழந்தார். ஒரு களத்தில் கட்டளையிடும் தரப்பு ஒன்றாகவே இருக்க வேண்டும், அல்லது தாம் மேற்கொள்ளவுள்ள நடவடிக்கை குறித்து அடுத்த தரப்பினருக்குத் தெரிவிக்க வேண்டும். ஒருங்கிணைப்பு இல்லாவிட்டால் எவ்வாறான நிலைமை ஏற்படும் என்பதற்கு இது ஒரு உதாரணம். ஏனெனில் கள நிலைமை அவ்வாறு இருந்தது. ஈ.பி.ஆர்.எல். எவ். மீது துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டவர் பின்னாளில் இதே காவலரணில் படையினரின் துப்பாக்கிச் சூட்டில் பலியானார். இதிலிருந்தே சூழ்நிலையின் விபரீதத்தைப் புரியலாம்.

**தலை குனிந்தபடி துண்டுப் பிரசுரம் வாங்கிய இயக்கங்கள் !**

அமீனின் உயிரிழப்பைத் தொடர்ந்து டக்ளஸ் தலைமை தாங்கிய ஈ.பி. ஆர்.எல்.எவ்வின் மக்கள் விடுதலைப் படை தட்டாதெருச் சந்தியில் புலிகளின் முகாமுக்குக் காவலாக நின்றவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டது. 21.02.1986 அன்று நடைபெற்ற இச் சம்பவத்தில் சுரேன் (திருச்சிற்றம்பலம் சுரேந்திரன் - அம்பாள் வீதி நாயன்மார்கட்டு - யாழ்ப்பாணம்) என்ற புலி உறுப்பினர் உயிரிழந்தார்.

அடுத்த நாள் தட்டாதெருச் சந்தி வழியாக சுரேனின் சடலத்தைத் தாங்கிய வாகன அணி புறப்பட்டது. அதே சமயம் ஈ.பி.ஆர்.எல்.எவ்வினரின் வாகன அணியும் மானிப்பாய் வீதியிலிருந்து தட்டாதெருச் சந்திக்கு வந்தது. அதில் அமீனின் சடலம் இருந்திருக்க வேண்டும் போல இருக்கிறது. இரு வாகன அணிகளும் ஒன்றையொன்று விலத்திச் சென்றன. அச்சமயம் அப்பகுதி மக்கள் "போராளிகளே உங்களுக்குள் முரண்படாதீர்கள். அது எமக்கு வேதனையளிக்கிறது" என்ற கருத்துப்பட உள்ள வாசகங்களைத் தாங்கிய துண்டுப் பிரசுரங்களை இரு பகுதியினருக்கும் வழங்கினர். இரு பகுதியினரும் தலையைக் குனிந்தபடி அதனை வாங்கினர்.

ரெலோவுடனான மோதலின் பின் புலிகள் கிராமம் கிராமமாகக் கருத்தரங்குகளை நடத்தி வந்தனர். அச்சமயம் மலரவன் தலைமையில் உரும்பிராய் வைரவர் கோவிலடியில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் அமீனின் மீதான துப்பாக்கிப் பிரயோகம் குறித்து ஒருவர் வினாவெழுப்பினார். "வவுனியாவில் நீங்கள் சுட்ட ரீகனும் பலஸ்தீனப் பயிற்சி பெற்றவர். கோட்டையில் உயிரிழந்த அமீனும் அவ்வாறானவரே. அத்தனை பேர் வந்துகொண்டிருந்த போது அமீனுக்கு மட்டும் அது எப்படி சூடுபட்டது? "

இக் கேள்விக்கு புலிகள் உறுப்பினர் ஒருவர். "அமீனைச் சுட்டதே பிழையெனக் கருதுகிறோம் நாங்கள். உங்களது கவலை ஏனையவர்களுக்கும் ஏன் சூடுபடவில்லை என்பது" எனப் பதிலளித்தார். வாயடைத்து நின்றார் வினாவெழுப்பியவர்.

• • •

வடக்கில் பெருமளவு இரத்தம் சிந்தப்படவில்லை. கிழக்கின் நிலை மாறுபட்டிருந்தது.

இந்திய இராணுவத்தின் வருகையைத் தொடர்ந்து ஈ.பி.ஆர். எல்.எவ்வினர் களமிறக்கப்பட்டனர். மண்டூர் போன்ற இடங்களில் இந்திய இராணுவத்தினர் இருக்கும் தைரியத்தில் புலிகளின் பணிமனைகளைத் தேடி வந்து முரண்பட்டுக் கொண்டனர். இதனால் பதிலடி கொடுக்க நிர்பந்திக்கப்பட்டனர் புலிகள்.

சண்டை தொடங்கி இந்தியப் படையினரின் கட்டுப்பாட்டுக்குள் வந்த பின்னர் தினமும் கொலைக்களம்தான். இந்தியப் படையினரால் கைதாகி தடுப்பில் இருந்த இருவர் யாழ். வைத்திய சாலையில் சேர்க்கப்பட்ட போது கடத்திச் செல்லப்பட்டு (இரு வெவ்வேறு சம்பவங்களில்) படுகொலை செய்யப்பட் டனர். கிளிநொச்சி கனகபுரத்தைச் சேர்ந்த குலசேகரம் நாகேந்திரன் (கண்ணன்), யாழ் ஸ்ரான்லி வீதியைச் சேர்ந்த ராசா (பாலசுப்பிரமணியம் இரத்தினேஸ்வரன்) ஆகியோரே இவர்களாவார். பிரபல பொருளியல் ஆசிரியர் கிருஷ்ணானந்தன் ( யாழ். கச்சேரியடி) இடைக்கால நிர்வாக சபைக்குப் புலிகளால் பெயரிடப்பட்ட சிவானந்தசுந்தரம் (வல்வெட்டித்துறை), அரசு புலிகள் பேச்சு வார்த்தைக்கு ஏற்பாடு செய்தவரான தனபாலசிங்கம், (காங்கேசன் துறை) "தம்பி கொழும்பில" புகழ் நாடக இயக்குனரும் நடிகருமான குமார் தனபால் (அரியாலை) போன்றோர் ஈ.பி.ஆர்.எல்.எவ்வினரால் கொல்லப்பட்டனர்.

(நாளையும் வரும்)

உலகச் செய்திகள்

# தென்கொரியாவுக்கு எதிரான இராணுவ நடவடிக்கை நிறுத்தம்

## வடகொரிய ஊடகங்கள் தகவல்



சியோல், ஜுன் 25

தென்கொரியா மீதான படையெடுப்பு நடவடிக்கையை வடகொரியா இடைநிறுத்தியுள்ளது என்று அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஜனாதிபதி கிம் ஜோங் உன் தலைமையில் நடந்த இராணுவத்தின் மத்திய குழுக் கூட்டத்திலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டதாகத் தெரிய வருகின்றது.

தென், வடகொரியா நாடுகளிடையே போர் மூளுமளவு பதற்றம் அண்மை நாட்களாக நீடித்து வந்தது.

வடகொரியாவுக்குள் தென்கொரியா பலூன்கள் மூலம் துண்டுப்பிரசுரங்களை அனுப்பியதன் மூலம், அந்நாடு வடக்கின் ஆட்சியாளர்களை கோபப்படுத்தியதாகவும் தெரிகிறது.

வடகொரிய ஜனாதிபதி கிம் ஜோங் உன்னின் சகோதரியும் - உன்னுக்கு அடுத்து அதிகாரமிக்கவர் என்று கருதப்படுபவரான கிம் யோ ஜோங் தெற்குடனான உறவை துண்டிக்கவும் - இராணுவ நடவடிக்கைக்கும் உத்தரவிட்டார்.

இதையடுத்து, இரு நாடுகளுக்கும் இடையிலான உறவு துண்டிக்கப்பட்டது. அத்துடன் எல்லையில் இருந்த தொடர்பு அலுவலகமும் தகர்க்கப்பட்டது. எல்லைப் பகுதியிலும் இராணுவம் குவிக்கப்பட்டது. இந்நிலையிலேயே வடகொரிய ஜனாதிபதி இராணுவ நடவடிக்கைக்கு அனுமதிக்கவில்லை என்று செய்திகள் வெளியாகியுள்ளன.

**திட்டமிட்ட நாடகமா?**

கிம் யோ ஜோங்கின் அறிக்கையை கவனமாகப் பார்த்தவர்களுக்கு அதிலிருந்த தந்திரம் தெரியும் என்று கூறப்படுகின்றது.

அதில், வடகொரிய இராணுவம் திட்டங்களை வகுப்பதாக அறிவித்தபோது, அது இராணுவத்தின் மத்திய குழுவால் அங்கீகரிக்கப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டது. இதனை அப்பட்டமாகக் கூறுவதானால், கிம் ஜோங் உன்னை இறுதி முடிவை அறிவிப்பார் என்றிருந்தது.

இந்நிலையிலேயே, அவர் படை நடவடிக்கைக்கு அனுமதி மறுத்துள்ளார். இது அவர் தன்னை நல்லவராகக் காட்டும் திட்டமிட்ட நாடகம் என்று தென்கொரிய அரசியல் ஆய்வாளர்கள் கருதுகின்றனர் என்று அந்நாட்டு ஊடகங்கள் குறிப்பிட்டன. எனினும், அவை இராணுவ நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளனவே தவிர முற்றாக நிறுத்தப்படவில்லை என்றும் சுட்டிக்காட்டின.

இதேவேளை, தென்கொரிய பல்கலைக்கழகத்தின் அரசியல் பேராசிரியரான பியோடர் டெர்ஸ்ட்கி கூறுகையில், சமாதானப் பேச்சின்போது அறிவிக்கப்பட்ட சலுகைகளை தென்கொரியாவும் அமெரிக்காவும் வழங்கவில்லை என்பதற்காக வடகொரியா நடத்தும் தந்திரமே இது என்று குறிப்பிட்டுள்ளார்.



கடந்த 21 ஆம் திகதி இடம்பெற்ற சூரிய கிரகணத்தின்போது பூமியின் மீது வீழ்ந்த நிலவின் நிழலை விண்வெளி வீரர் ஒருவர் படம்பிடித்துள்ளார்.
கிறிஸ் காசிடி என்ற நாசா விண்வெளி வீரரரே சர்வதேச விண்வெளி ஆய்வு மையத்தில் இருந்து இந்தக் காட்சியைப் படம்பிடித்து அனுப்பி வைத்தார்.

# கொரோனா பரவலுக்கு மத்தியில் ரஷ்யாவில் போர் வெற்றி விழா!

## உலக நாடுகளின் தலைவர்கள் பலர் பங்கேற்பு





மொஸ்கோ, ஜுன் 25

இரண்டாம் உலகப் போரின் 75 ஆவது ஆண்டு வெற்றி விழாவை ரஷ்யா நேற்று நடத்தியது.

கடந்த மே 9 ஆம் திகதி நடக்கவிருந்த இந்த வெற்றிவிழா கொரோனா தொற்று அச்சம் காரணமாகப் பிற்போடப்பட்டது. இந்நிலையில் நேற்று மிகப்பெரிய இராணுவ அணிவகுப்பை ரஷ்யா நடத்தியது.

இரண்டாம் உலகப் போரின் போது, முன்னைய சோவியத் ஒன்றியத்தின் மீது ஜேர்மனி தலைமையிலான நாஜி படைகள் ரஷ்யாவை கைப்பற்றின. மீண்டெழுந்த சோவியத் ரஷ்யா ஜேர்மனியை தோற்கடித்தது. இந்தப் போரில் 2 கோடி ரஷ்யப் படையினர் உயிரிழந்தனர்.

இந்த வருடம் ரஷ்ய தலைவர் புடினுக்கு முக்கியமான ஆண்டாகும். ஏனெனில் ரஷ்யாவின் அரசமைப்பில் சில திருத்தங்களை அவர் முன்னெடுத்துள்ளார். அது விரைவில் மக்கள் வாக்கெடுப்புக்கு விடப்படவுள்ளது. இதன் மூலம் 2024 இன் பின்னரும் அவரின் ஆட்சியைத் தொடர வழியேற்படும். இதற்கு இந்த வெற்றி விழா அவசியமாகப்படுகின்றது.

இந்நிலையில், கொரோனா தொற்று தீவிரமாகப் பரவி வருகின்றது. தினமும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொற்றாளிகள் இனங்காணப்படுகின்றனர். இதுவரை 6 இலட்சம் பேர் தொற்றாளிகளாக இனங்காணப்பட்டுள்ளனர். இந்நிலையிலேயே அணிவகுப்பை நடத்த தலைவர் புடின் முடிவு செய்துள்ளார்.

இந்த அணிவகுப்பில் 13 ஆயிரம் போர் வீரர்களும், 234 கவச வாகனங்களும் 75 போர் - சாகச விமானங்களும் பங்கேற்றன.

இரண்டாம் உலகப் போரில் புடினும் தனிப்பட்ட ரீதியாகப் பாதிப்புக்களை எதிர்கொண்டவராவார். அவரின் தந்தையார் போரின்போது படுகாயங்களுக்கு உள்ளானார். அவரின் மூத்த சகோதரரான விக்ரர் லெனின்கிராட் முற்றுகையின்போது இறந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்த அணி வகுப்பில், பிரான்ஸ் ஜனாதிபதி இமானுவேல் மக்ரோன், சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங், மற்றும் உலக நாடுகளின் தலைவர்கள் சோவியத் ரஷ்யாவில் இருந்து பிரிந்து போன தலைவர்களும் பங்கேற்றனர்.



# 'மாஸ்க்' அணியாத பிரதமருக்கு அபராதம்

சோபியா,ஜுன்25

முகக்கவசம் (மாஸ்க்) அணியாமல் - சுகாதார விதிகளை மீறி நடந்த பல்கேரிய நாட்டின் பிரதமருக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

கொரோனா தொற்று உலக நாடுகளுக்கு பெரும் சவாலாக மாறியுள்ளது. இதற்கு சுமார் 4 இலட்சத்து 75 ஆயிரத்துக்கும் அதிகமானோர் உயிரிழந்தனர். இதனால் உலக நாடுகள் பலவும் கட்டுப்பாடுகளை மக்களுக்கு விதித்து வருகின்றன.

இதேபோன்றே, பல்கேரியா நாட்டிலும் வீட்டை விட்டு வெளியே செல்லும் மக்கள் முகக்கவசம் அணிவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. மீறுபவர்களுக்கு அபராதம் விதிக்கப்படுகின்றது.

இந்நிலையில், அந்நாட்டின் பிரதமர் பொய்க்கோ பொரிசோவ், நேற்று முன்தினம் தேவாலயம் ஒன்றுக்கு சென்று வழிபாட்டில் ஈடுபட்டார். அவருடன் அதிகாரிகள், பத்திரிகையாளர்கள் எனப் பலர் சென்றிருந்தனர்.

இதன்போது, பிரதமர் உட்பட பலரும் முகக்கவசம் அணியவில்லை. இதையடுத்து அனைவருக்கும் தலா 300 லிவ்ஸ் (நம் நாட்டு மதிப்பில் சுமார் 31 ஆயிரம் ரூபா) அபராதம் விதிக்கப்படுகிறது அந்நாட்டின் சுகாதார அமைச்சர் அறிவித்தார்.

# 40 படையினர் பலியாகவில்லை! சீனா மறுப்பு

இந்திய இராணுவத்தினருடனான மோதலில் தமது தரப்பில் 40 இராணுவத்தினர் பலியாகவில்லை என்று சீனா அறிவித்துள்ளது.

லடாக் கல்வான் பள்ளத்தாக்கில் கடந்த வாரம் இந்திய - சீன இராணுவத்தினர் மோதினர். இதில் இந்தியத் தரப்பில் 20 பேர் பலியாகினர். 70 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

சீனாவின் தரப்பில் 40 இற்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்திருக்கலாம் அல்லது காயமடைந்திருக்கலாம் என்று இந்திய இராணுவத்தினரை ஆதாரமாகக் கொண்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

இது தொடர்பில் சீன வெளியுறவுத் துறையின் செய்தித் தொடர்பாளர் ஜாவோ லிஜியனிடம் கேள்விகள் எழுப்பப்பட்டன.

இதற்கு அவர் பதிலளிக்கையில், "இந்தியா - சீனா இராணுவ மட்டத்திலும், இராஜதந்திர ரீதியிலும் பிரச்னைகளைத் தீர்க்கின்றன. இந்திய அதிகாரிகள் 40 சீன வீரர்கள் கொல்லப்பட்டனர் என்ற இந்திய ஊடகங்களின் செய்தி பொய்யானது என்பதை உங்களுக்கு பொறுப்புடன் கூற முடியும்" என்றார்.

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிரைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 25.06.2020 அன்று வெளியிடப்பட்டது.